முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.02.03.2026

O.S. No.297/2014

பி.வா.சா-1 ஆர்க்கேஞ்சல்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

மரிய அந்தோணிராஜ் எனது சகோதரர் அவர் வாதியின் அப்பா ஆவார். அவருக்கு 1985 ல் திருமணம் நடந்தது. வாதி 1986 ல் பிறந்தார். வாதியின் 1 ½ வயதில் வாதியும் அவரது அம்மாவும் பாம்பே சென்றார்கள். திரும்பி எப்போது வந்தார்கன் என்று எனக்கு தெரியாது. 26 வருடங்கள் வாதியும் அவரது அம்மாவும் பாம்பேயில் தங்கியிருந்ததாக முதன்மை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரம் சரியானது. பாம்பேயில் குறிப்பிட்ட எந்த பகுதியில் தங்கியிருந்தார்கள் என்ற விவரம் தெரியாது. அவர்கள் பாம்பேயில் தங்கியதற்கு என்னிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரி. வாதி எங்கு படித்தார் என்று எனக்கு தெரியாது. வாதி 1 முதல் 5 ம் வகுப்பு வரை கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கேடு பறவை பள்ளியில் படித்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 6 முதல் 8 வரை கல்குளம் தாலுகாவில் உள்ள மணலிக்கரை பள்ளியில் படித்தார் என்றால் தெரியாது. 9 முதல் 12 வரை கன்னியாகுமரியில் உள்ள பூட்டேற்றி பள்ளியில் படித்தார் என்றால் தெரியாது.

பாலிடெக்கினிக் திங்கணங்கோடு பகுதியில் படித்தார் என்றால் தெரியாது. வாதியும் அவரது அம்மாவும் பாம்பேயில் இருந்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் அப்பா 2014 ஆம் ஆண்டு இறந்தார். வாதியின் அப்பா அம்மாவை பிரிந்து வாழ்வதற்கு சட்டப்படி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான் அவர்கள் இங்கு இல்லாத காரணத்தினால் எடுக்க முடியவில்லை. வாதியின் அப்பா அம்மாவை பிரிந்த வாழ்ந்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பி பட்டிகை

சொத்தின் சர்வே எண் 335/12 ல் ஒரு பகுதி ஆகும். அதில் வீடு உள்ளது. பி பட்டிகை சொத்திற்கு விளம்புகை செய்யவும் அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் வாதி பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சரியல்ல என்னுடைய சொத்தில் வாதியின் சொத்து கூடுதலாக இருப்பதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த சொத்து சம்பந்தமான வழக்கில் வாதியின் பெற்றோர்களுக்கிடையே உள்ள பிரச்சனையை சொல்ல காரணம் என்ன என்றால் வாதிக்கு உரிமையில்லாத சொத்தில் இந்த வழக்கு போட்டுள்ளதால் நான் அவர்கள் பெற்றோர்களுக்கிடையே உள்ள பிரச்சனையை சொல்லியுள்ளேன். வாதிக்கு அவரது சொத்தை கொடுக்ககூடாது என்பதற்காக வாதியின் பெற்றோர்களுக்கிடையே பிரச்சனை இருந்ததாக பொய்யாக வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் அப்பாவுக்கு வாதியின் தாத்தா செல்வராஜ் 13 ½ சென்ட் சொத்தை எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். 2004 ல் செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதி கொடுத்தார். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் மேற்கு எல்லையாக என்னுடைய சொத்து காண்பிக்க பட்டுள்ளதென்றால் சரி. என் அப்பா எனக்கு 14 ½ சென்ட் சொத்தை செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதி கொடுத்தார்.

2000 ல் 5 சென்ட்டும் 2002 ல் 8 ½ சென்ட்டும் 2004 ல் 1 சென்ட்டுமாக 3 செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதி கொடுத்தார். வாதியின் அப்பா இறந்த பின்பு அப்பாவின் சொத்து வாதிக்கு கிடைக்கும் என்றால் சரியல்ல. கோர் இம்மார்க் ஜுலியின் காலம் வரை அனுபவித்து கொள்ளலாம் அவரது வாரிசுக்கு மட்டுமே முழு அனுபவம் என்று நிபந்தனை உள்ளது. கோர் இம்மார்க் ஜுலி என்ற எழில் ரூபன் என்றால் எழில்ரூபன் என்ற பெயரில் ஆவணங்கள் இல்லை எழில்ரூபனை எனக்கு யார் என்று தெரியாது. கோர்

இம்மார்க் ஜூலி என்ற எழில் ரூபன் என் அண்ணன் மகன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.290/25 என்ற வழக்கை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரி. அந்த வழக்கில் 5 ம் பிரதிவாதி யார் என்றால் கோர் இம்மார்க் ஜூலி என்ற எழில் ரூபன் ஆகும். அவரது அப்பாவின் பெயர் மரியஅந்தோணி ராஜ் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. அந்த வழக்கின் 5 ம் பிரதி இந்த வழக்கின் வாதி என்றால் சரி.

எனவே கோர் இம்மார்க் ஜூலி என்ற எழில் ரூபன் யார் என்று தெரியாது என்று சொல்லிய சாட்சி தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. அவர் சொத்தை பார்வையிடும் முன் எனக்கும் என் வக்கீலுக்கும் அறிவிப்பு செய்தார் என்றால் சரியல்ல. எனக்கு அறிவிப்பு வரவில்லை. வக்கீலுக்கு வந்ததா என்று எனக்கு தெரியாது. ஆணையர் இடத்தை பார்வையிட்ட போது நான் என் வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை பார்த்தேன் அது தவறான விவரங்களுடன் இருந்தது. புகைப்படம் தவறான புகைப்படம் ஆகும்.

அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் ஆட்சேபனை தாக்கல்செய்யவில்லை என்றால் சரி.ஆணையரை சாட்சியாக விசாரிக்க வாதி தரப்பில் மனுதாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும் நான் அதற்கு கடுமையான ஆட்சேபனை செய்து எதிருரை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் சரியான விவரங்கள் கொண்டது என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கை படி என் வசம் 17 ½ சென்ட் இடம்

இருப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரி. ஆனால் அது தவறான விவரம். வாதியின் இடம் 10 ½ சென்ட் மட்டுமே இருப்பதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி. அது தவறான விவரம். ஆணையர் அறிக்கை படி வாதிக்கு உரிமைப்பட்ட 3 சென்ட் இடம் என்கைவம் உள்ளது என்றால் சரியல்ல. என் ஆக்கிரமிப்பில் உள்ள 3 சென்ட்டை மீட்டு பெறுவதற்கு விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சரியல்ல.

2005 லேயே நான் காம்பவுண்ட் சுவர் கட்டிவிட்டதால் வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது என்னுடைய தர்க்கம் என்றால் சரியல்ல. நான் என்னுடைய வீட்டை கட்டுவதற்கு ஆசாரிபள்ளம் பஞ்சாயத்தில் இருந்து அனுமதி பெற்றேன். அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். உண்மையில் நான் 2005 ல் காம்பவுண்ட் கட்டவில்லை 2012 ல் கட்டினேன் என்றால் சரியல்ல. வழக்கு எ பட்டிகை சொத்து வாதியின் கைவச அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு எ பட்டிகைசொத்து யாருடைய அனுபவத்திலும் இல்லாமல் அனாமத்தாக உள்ளது. எ பட்டிகைசொத்தில் 2 தென்னை மரங்கள் உள்ளது. அதில் காய்பலன்கள் யார் எடுத்து அனுபவிக்கிறார்கள் என்றால் ஆக்கர் கடைக்கு வேலைக்கு வரும் நபர்கள் எடுத்து செல்வார்கள் இல்லை என்றால் நிலத்தில் அப்படியே கிடக்கும்.

இருமாதத்திற்கு ஒருமுறை தென்னைமரங்களில் இருந்து காய்பலன்கள் எடுக்க வாதி வந்து செல்கிறார் என்றால் சரியல்ல. அவர் வருவதே இல்லை. வாதியின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்து அதை கொடுக்க மனமில்லாமல் பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதி அப்பா பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தில் நிபந்தனை

உள்ளது என்ற விவரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் வாதி அப்பா பெயருக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரி. கோர் இம்மார்க் ஜூலி பெயர் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அந்த பெயரை மாற்றினால் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் தானாக ரத்தாகும் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

எனது சகோதரர் மரியஅந்தோணி ராஜ்க்கு ஒரே மகன் கோர்இம்மார்க் ஜூலி ஆவார். மரியஅந்தோணிராஜ்க்கு செலின் ரோஸ் என்ற தங்கலீலாவை தவிர வேறு பெண்தொடர்பு உள்ளதா என்றால் வேறு பெண்தொடர்புகள் இல்லை. செலின்ரோஸ் மட்டுமே மனைவி ஆவார். தங்கலீலா யார் என்று எனக்கு தெரியாது. மரியஅந்தோணிராஜின் மகனுடைய ஆவணங்கள் அனைத்தும் எழில்ரூபன் என்று மட்டுமே உள்ளது கோர்இம்மார்க் ஜூலி என்று இல்லை. அ.வ.எண்.290/2025 ல்4ம் பிரதி யார் என்றால் செலின் ரோஸ் என்ற தங்கலீலா ஆகும். செலின்ரோஸ் என்ற தங்கலீலா மரியஅந்தோணி ராஜின் மனைவி என்று சொல்லப்பட்டுள்து என்றால் சரி.

எழில்ரூபன் என்ற பெயரில் என்ன பிரச்சனை என்றால் மரியஅந்தோணி ராஜ் அவரது மகனுக்கு கோர் இம்மார்க் ஜூலி என்ற பெயர் வைத்தார் அவரது அம்மா எழில்ரூபன் என்ற பெயர் வைத்தார். வாதி கேட்ட பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)